**சுருக்கம்**

மோட்டார் வாகனம் – மதுரை மாவட்டம் – அரசு இராஜாஜி மருத்துவமனை வாகனம் டி.என் 59ஜி 0360 வாகனம் 23.06.2001 அன்று விபத்துக்குள்ளானது – திரு.ஆர். செந்தில் என்பவருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி–1) துறை**

அரசாணை (2 பத்தாண்டு) எண்: 61

நாள்: 16.07.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய – ஆனி 32

படிக்கப்பட்டது:

மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம்
ந.க. எண். 65545/நி4/2/2012, நாள்: 26.11.2012.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் 23.06.2001 அன்று அரசு இராஜாஜி மருத்துவமனை வாகனம் எண் டி.என் 59ஜி 0360 என்ற ஆம்புலன்ஸ் வாகனம் 23.6.2001ல் விபத்துக்குள்ளானது தொடர்பாக திரு.ஆர். செந்தில் என்பவரால் தொடரப்பட்ட வழக்கிற்கான தீர்ப்பு 6.11.2007ல் இழப்பீட்டுத் தொகை ரூ.54,750/–ம் அதற்கான வட்டியை பைசலாகும் வரை 7.5% கணக்கிட்டு வழங்கவும், அத்தீர்ப்பை எதிர்த்து சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையாக 6.11.2007 முதல் 30.09.2013 வரை கணக்கிட்டு ரூ.1,03,702/– வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மருத்துவக் கல்வி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை வாகனம் டி.என். 59 ஜி 0360 விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து விபத்தில் பாதிக்கப்பட்ட திரு.ஆர். செந்தில் என்பவருக்கு இழப்பீட்டுத் தொகை ரூ.54,750/–ம் அதற்கான வட்டியை 7.5% கணக்கிட்டு 30.06.2014 வரை ரூ 1,06,401/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஆறாயிரத்து நானூற்றி ஒன்று மட்டும்) கீழ்க்கண்டவாறு ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

..2.

| | | | | |
|---|---|---|---|---|
| இழப்பீட்டுத் தொகை | – | | | ரூ.54,750.00 |
| வருடாந்திர வட்டி விகிதம் | – | | | 7.5 % |
| 02.05.2002 முதல் 31.05.2002 வரை | – | | | 30 நாட்கள் |
| 01.06.2002 முதல் 30.06.2014 வரை உள்ள மொத்த காலம் | | | | 144 மாதங்கள் |
| வட்டி | – | அசல் X காலம் X வட்டி விகிதம் | | |
| ஒரு மாதத்திற்கு வட்டி | – | ரூ 54750 x 1/12 x 7.5/100 = ரூ.342 | | |
| 02.05.2002 முதல் 31.05.2002 வரை 30 நாட்களுக்கான வட்டி | | ரூ 342x1/31 x 30 = ரூ.330.09 | | |
| 01.06.2002 முதல் 30.06.2014 வரை 144 மாதங்களுக்கான வட்டி | | | | ரூ.342 x 144 =ரூ. 49,248 |
| தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீடு தொகை | | | ரூ<br>ரூ<br>ரூ<br>ரூ | 49,248.00<br>54,750.00<br>330.09<br>2073.00 |
| | – | | ரூ | 1,06,401.09 |
| மொத்தம் | | | ரூ | 1,06,401.09 |
| (ரூபாய் ஒரு இலட்சத்து ஆறாயிரத்து நானூற்றி ஒன்று மட்டும்) | | | | |

3. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2210–மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01 நகர்ப் பகுதி சுகாதாரப்பணிகள் – ஆங்கிலமுறை மருத்துவம் – 110 மருத்துவமனைகளும், மருந்தகங்களும் I திட்டத்தில் சேராதது – DN ராஜாஜி அரசு மருத்துவமனை, மதுரை – 51 இழப்பீடு – 02. ஏனைய இழப்பீடுகள்" (சாட்டியது)
> (த.தொ.கு.2210–01–110–DN–5120)

4. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2014–2015ம் ஆண்டு திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும், அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மருத்துவக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் 2014–2015ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீடு நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் (சுகாதாரம்– I) துறைக்கு அனுப்பும் பொழுது இத்தொகையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு மருத்துவக் கல்வி

இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இதுபோன்ற கருத்துருவில் ஏற்படும் காலதாமதத்தால் அரசுக்கு கூடுதல் செலவினங்களைத் தவிர்க்கும் வகையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.32749/சுகாதாரம்– II, 2014 நாள் 02.07.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.647 (அறுநூற்று நாற்பத்தேழு) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர் சென்னை–10.
முதல்வர்,
மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை.
மாநிலக்கணக்காயர், சென்னை–18/35
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
**நகல்:**
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலைநேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
உள் (போ. வ ) துறை, சென்னை–நிதித் (வ.செ. பொது–2 / சுகாதாரம் – II) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டேட்டா செல்) துறை, சென்னை–09.
இருப்பு கோப்பு / சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/07/14

பிரிவு அலுவலர்.

16/7/14